**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 45/2024**

Name : வசந்தி (PW1)
Date: 27.06.2025

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் என்ன படிப்பு படித்துள்ளேன் என்றால் C.P.Ed, M.A., M.Ed., M.Phil, படித்துள்ளேன். என்னை நிரந்தர பணியமர்த்துவதற்கான அதிகாரம் யாரிடம் உள்ளது என்றால் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் உள்ளது. எதிரி எந்த ஆண்டு பணியில் இருந்தார் என்று தெரியுமா என்றால் 2014 ம் ஆண்டு நான் வருவதற்கு முன்பே அங்கு பணியில் இருந்தார். இறந்து போன பள்ளியின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணியம் அமர்வதற்கு பள்ளி வளாகத்தில் தனி அறை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பள்ளியின் செயலாளரை பணி நிரந்தரம் சம்பந்தப்பட்ட வழக்கு சமயத்தில் தனியாக சந்தித்து வழக்கு சம்பந்தமாகவோ வேறு குறைபாடுகள் சம்பந்தமாகவோ பேச எனக்கு வாய்ப்பு இருந்திருக்கும் என்றால் இல்லை.

2. பள்ளியின் தலைமை ஆசிரியர் பள்ளி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் தான் செயல்படுவார் என்றால் சரிதான். பள்ளி சம்பந்தப்பட்ட எவ்வித பிரச்சனைகள் குறைபாடுகள் குறித்து நாங்கள் பள்ளியின் தாளாளரான S.N. பாலசுப்பிரமணியத்திடம் தான் முறையிடுவோம் என்றால் இல்லை, பள்ளி தலைமை ஆசிரியரான எதிரியிடம் கூறுவோம். பள்ளியில் உள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தங்கவேலுவிடம் அந்த பணிபுரியும் ஆசிரியர் மற்றும் பணியாளர் குறைபாடுகள் சம்பந்தமாக முறையீடு செய்வோமா என்றால் இல்லை. பள்ளி நிர்வாகத்தை தவிர பொதுமக்கள் யாராவது பள்ளிக்கு நன்கொடை செலுத்திய இரசீது ஏதாவது பார்த்துள்ளேனா என்றால் அது சம்பந்தப்பட்ட அலுவலகம் தனியாக இருப்பதால் நான் பள்ளியில் இருப்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. நான் எப்போது பணி நிரந்தரம் செய்யப்பட்டேன் என்றால் 07.03.2018 ல் பணிநிரந்தரம் செய்யப்பட்டேன். என்னை நிரந்தர பணி செய்ததது 07.02.2018 என்று என்னை விசாரணை செய்த காவல் அதிகாரி குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்று சொன்னால் எனது பணி நிரந்தர ஆணையை பார்த்தால் தான்

சொல்லமுடியும். பொதுவாக ஒரு பள்ளியின் ஆசிரியரை ஒருமுறை தான் பணி நிரந்தரம் செய்யப்படுவது வழக்கம் என்றால் சரிதான். என்னை பணி நிரந்தரம் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு மீண்டும் என்னை பணி நிரந்தரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். 02.042018 முதல் 04.06.2018 வரையான இடைப்பட்ட காலத்தில் பள்ளி செயலாளர் SN. பாலசுப்பிரமணித்தையோ, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் தங்கவேலை பார்த்தேனா என்றால் வளாகத்திற்குள் அவர்கள் வரும் போது பார்த்தேன். தனிப்பட்ட முறையில் சென்று பார்க்கவில்லை. நான் பணிபுரியும் பள்ளியானது அறக்கட்டளை சார்பாக நடத்தப்படுவதால் அதன் செயலாளர் சுப்பிரமணியம் தினமும் காலை மற்றும் மாலை பள்ளியை பொதுவாக பார்வையிடுவது வழக்கம் என்றால் சரியல்ல, அவருக்குநேரம் இருக்கும்போது எப்போதாவது ஒருமுறை தான் வருவார்.

4. அறக்கட்டளை அலுவலகத்திற்கு செயலாளர் பாலசுப்பிரமணியம் தினமும் வருவார் என்றால் அங்கும் மாதம் ஒரிரு முறை தான் வருவார். அறக்கட்டளையில் உள்ள மற்ற பணியாளர் இருப்பார்களா என்றால் இருப்பார்கள். எனது மாத சம்பளம் எவ்வளவு என்றால் பிடித்தம் போது ரூ.36,000/- வரும். எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயலாளராக 32 வருடமாக பணி செய்து வருகிறார். கந்தசாமிபாளையத்தில் உள்ள சூர்யா பேக்கரியை ஏற்கனவே பார்த்துள்ளேன். போலீஸார் விசாரணையில் 02.04.2018 ம் தேதியன்று ரூ.4லட்சம் என் கையில் ரொக்கமாக இருந்தது என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. போலீஸார் என்னை விசாரித்த போது ரூ.4லட்சம் ரூபாய் என்னிடம் பணம் 02.04.2018 ல் இருந்தது என்பதை காட்ட ஆவணம் வைத்துள்ளேனா என கேட்டு விசாரித்தார்களா என்றால் இல்லை.

5. நானும், எனது கணவர் அரசு ஊழியர் என்பதால் எங்கள் வருமானத்திற்கு வருமானவரி செலுத்தி வருகிறோமா என்றால் எனக்கு வருமானம் வரி செலுத்தும் அளவிற்கு சம்பளம் இல்லை என்றாலும் நான் தனியாக வருமானவரி கணக்கு தாக்கல் செய்து வருகிறேன். நான் முதலில் S.N. பாலசுப்பிரமணியத்தை சந்தித்து முறையிட்ட பின்பு தான் கார்த்திகேயன், சதீஸ் செல்வராஜ் ஆகியோர்களும் S.N. பாலசுப்பிரமணியத்திடம் புகார் கொடுத்தார்களா என்றால் நாங்கள் அனைவரும் ஒன்றாகத்தான் சென்று புகார் கொடுத்தோம். 2.04.2018 க்கு பின்னிட்டு 04.06.2018 இடைப்பட்ட காலத்தில் கார்த்திகேயன், சதீஸ், செல்வராஜ் ஆகியோர்களை சந்தித்து பேசினோமா என்றால் ஒன்றாக பணிபுரிவதால் பள்ளியிலேயே பேசினோம். 02.04.2018 க்கும் 04.06.2018 இடைப்பட்ட காலத்தில் நான் செயலாளர் பாலசுப்பிரமணியத்தை சந்தித்தோ, அல்லது பெற்றோர் ஆசிரியர் தலைவர் தங்கவேலை சந்தித்தோ மேற்படி தலைமை ஆசிரியர் பணம் கேட்டதாக சொன்னேனா என்றால் இல்லை.

6. பொதுவாக பள்ளியின் தலைமை ஆசிரியர் சம்பந்தமாக பிரச்சனை அல்லது செயல்பாடு சம்பந்தமாக ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால் நிர்வாக தலைமையிடம் முறையிடுவது வழக்கம் என்ற நிலையில் நான் பள்ளியின் அறக்கட்டளை செயலாளர் பாலசுப்பிரமணியத்தை சந்தித்து தலைமை ஆசிரியர் பணம் கேட்டது சம்பந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொன்ன தேதியில் நான் கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை எதிரியிடம் கொடுக்காததால் தான் அது சம்பந்தமாக அறக்கட்டளையின் செயலாளரிடமோ, பெற்றோர் ஆசிரியர் தலைவரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல, பின்னிட்டு தான் இது சம்பந்தமாக செயலாளரிடம் சொன்னேன். 04.06.2018 வரை நான் அறக்கட்டளை செயலாளரிடமோ, பெற்றோர் ஆசிரியரிடம் புகார் கொடுக்காத நிலையில் தலைமை ஆசிரியர் பணம் பெற்றது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 04.06.2018 வரை கொடுக்கவில்லை, அதற்கு பின்னிட்டு அறக்கட்டளை செயலாளரிடம் புகார் கூறி அரச்சலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

7. நான் எனது எப்போது நான் அறக்கட்டளை செயலாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. நான் என்னுடைய முதல் விசாரணையில் ரூ.6,00,000/– எதிரியிடம் கொடுத்த நிலையில் மேலும் ரூ.2,00,000/–ம் கேட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி விவரத்தை நான் எழுத்துமூலமாக அறக்கட்டளை செயலாளரிடம் கொடுத்த புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் செயலாளர் பாலசுப்பிரமணியடம் கொடுத்த புகாரானது வழக்குக்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.மேற்படி பள்ளியின் அறக்கட்டளை செயலாளராக இருந்த மறைந்த எஸ்.என்.பாலசுப்பிமணியம் எதிரியான தலைமையாசிரியரை அந்த பள்ளியிலிருந்து இட மாறுதலில் செல்லுமாறு குறிப்பிட்டு அதை எதிரி ஏற்காமல் நான் நேர்மையாக நன்கு பள்ளியில் பணிபுரிவதால் பணி மாறுதல் செல்லமுடியாது என குறிப்பிட்டதால் எதிரி மீது எஸ்.என்.பாலசுப்பிரமணியம் பொய்யாக என்னையும் சதீசையும் செல்வராஜையும், அழைத்து மேற்படி எதிரி மீது மேற்படியான புகாரை தருமாறு கேட்டு வாங்கி எதிரிக்கு எதிராக மேற்படி மோசடியான புகாரைக் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பாதிக்கப்பட்டதால் தான் நான் புகார் கொடுத்துள்ளேன். நான் உண்மையாகவே எதிரிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8 மேலும் நான் உண்மையாக எதிரிக்கு நான் குறிப்பிடும் தொகை கொடுத்திருந்தால் படித்த ஆசிரியர் என்பதால் அதற்குரிய ஆவணத்தை வைத்திருப்பேன் அது பொய் என்பதால் தான் எவ்வித ஆவணமும் இல்லாமல் பணம் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் நானும் என் கணவரும் அரசு ஊழியராக உள்ள நிலையில் வருமான வரி செலுத்தி வருகின்ற சூழ்நிலையில் ரூ.20,000/–க்கு மேல் பணம் வரவு செலவு செய்யும்போது வங்கி கணக்கில் தான் பரிமாற்றம் செய்யவேண்டுமென்ற விபரம் தெரிந்துள்ள நிலையில்

அவ்வாறு தராமல் ரொக்கமாக கொடுத்ததாகச் சொல்வது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக ஒரு அரசு ஊழியர் தன்னுடைய பணி நிரந்தரத்திற்காக பணம் கொடுத்து பணி நிரந்தரம் செய்யக்கோருவது சட்டப்படி தவறான செயல் என்று சொன்னால் நான் பணிநிரந்தரம் செய்வதற்காக பணம் கொடுக்கவில்லை. அதாவது பள்ளிக்கு நன்கொடையாகத்தான் மேற்படி பணத்தைக் கொடுத்தேன்.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி : வசந்தி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.